# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 20.09.2019**

**முன்னிலை**

**திரு.இரா.தட்சிணாமூர்த்தி, பி.எஸ்ஸி., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5404/SCIC/2018**

திரு மருத. மோகன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்,
திருவிடைமருதூர் பொது அதிகார அமைப்பு
தஞ்சாவூர் மாவட்டம்.

**ஆணை**

இன்று (20.09.2019) இவ்வாணையத்தில் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு மருத. மோகன், ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு A. செந்தில் குமார், பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 20.03.2018 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் 1925ம் ஆண்டின் ஆர்.எஸ்.ஆர் ஆவணத்தின் நகலில் திருப்பனந்தாள் கிராமம், சர்வே நெ.248 பிரிவு 248-1ன் சப் டிவிசன்படி இன்று வரை அரசு புறம்போக்கு நத்தம் என அரசு கணக்கில் உள்ளதாகவும், அவ்வாறு இருக்கையில் ஆவண எண்.2568/1963ன் பத்திர பதிவின்போது அரசு புறம்போக்கு இடத்தில் காசிமடத்தின் சார்பில் மருதமுத்து பெயர்க்கு பத்திர பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் பதிவு காலத்தில் எந்த வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அல்லது கிரய சாசன பத்திரம் தாண செட்டில்மெண்டு பத்திரம் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றும் தகவல்கள் வேண்டியுள்ளார். மேலும் பதிவு காலத்தில் அலுவலகத்தில் உள்ள வருவாய் துறையின் ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றும் தகவல் கோரியுள்ளார். 27/04/2018 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவண எண் 2568/1963 பதிவு நகலை உரிய கட்டணம் செலுத்திப் பெற்று அதன் தகவல்களை தெரிந்துகொள்ளுமாறு தெரிவித்துள்ளார். திருப்தியடையாத மனுதாரர் 07.05.2018 அன்று தனது மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். இதுசம்மந்தமாக பொதுத் தகவல் அலுவலரால் 29.05.2018 மற்றும் 30.05.2018 ஆகிய தேதிகளில் மனுதாரருக்கு மீண்டும் பதில் அளிக்கப்பட்டுள்ளது. திருப்தியடையாத மனுதாரர். தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை 23.07.2018 அன்று தாக்கல் செய்துள்ளார். அதன் பேரில் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. மனுதாரர் தனது தகவல் பெறும் உரிமைச்சட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 248 பிரிவு 248/1 என்ற சொத்து வருவாய் துறையின் ஆவணங்களின் படி அரசு புறம்போக்கு நத்தம் என்று உள்ளதென்றும்,

ஆனால் மேற்சொன்ன சொத்தை ஆணை எண் 2568/1963ன் படி சொத்துகுறித்து மனுதாரரின் தந்தை மருதமுத்து என்பவருக்கு காசிமடத்தின் சார்பில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும், மேற்சொன்ன ஆவணம் எழுதப்படும்பொழுது வருவாய்துறையின் ஆவணங்களை பதிவுத்துறை அதிகாரிகள் பார்வையிட்டனரா, அவ்வாறு பார்வையிட்டிருந்தால் அதன் தகவல்களை தனக்கு வழங்குமாறு கேட்டிருப்பது நன்கு அறியமுடிகிறது. மேற்சொன்ன ஆவணத்தில் மனுதாரரின் தந்தை மருதமுத்து என்பவர் ஆவணத்தில் கண்ட சொத்து ஸ்ரீகுமரகுருபர் சுவாமிகள் நித்திய மகேசுவர பூஜை தருமத்திற்கு எழுதிவைக்கப்பட்டுள்ளதென்றும், அதை ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அனுபவித்து வருவதாகவும் மேற்சொன்ன அடிமனையில் மனுதாரரின் தந்தை மருமமுத்து கூரை வீடு கட்டி குடியிருந்துவருவதற்கு ஒப்புக்கொண்டுள்ளதாகவும், தரைவாடகை ரூ.6/-ஐ செலுத்திவிடுவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளதையும் காணமுடிகிறது. மேற்படி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சர்வேஎண் 248 நத்தம் என்று குறிப்பிடப்பட்டு ஆவணப்பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காணமுடிகிறது. மேற்சொன்ன பத்திரத்தில் உள்ள வாசகங்களை பரிசீலனை செய்கையில் மேற்படி சொத்து ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளுக்கு பாத்தியப்பட்டது என்பதையும், மனுதாரரால் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்பதையும் மனுதாரரின் தந்தை மருதமுத்து என்பவரால் ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் அறியமுடிகிறது. மேற்படி பத்திரத்தினடைய சொத்து விவரத்தில் கிராம ரீசர்வே எண். 248 நத்தம் என்று எழுதப்பட்டுள்ளது என்பதையும் காண முடிகிறது.

4. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர் மேற்படி சொத்து 1987ல் தனது தந்தை பெயருக்கு ரீசர்வே செய்யப்பட்டுள்ளது என்றும், அதை அனுசரித்து வருவாய்துறையில் 1993ல் தனிபட்டா வழங்கப்பட்டுள்ளதென்றும் தெரிவித்தார். இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் ஆவண எண். 2568/1963 பதிவு செய்யப்படும் போது முன்ஆவணங்களை பரிசீலனை செய்யும் வழக்கம் ஏதுமில்லையென்றும், 2018 முதலே அதுபோன்ற நடவடிக்கை கடைபிடிக்கப்படுகிறதென்றும், மனுதாரர் கோரும் தகவல் ஏதும் ஆவணத்தில் இல்லையென்பதால், அத்தகவல்களை தங்களால் வழங்கஇயலாது என்றும் மேலும் ஆவணங்களில் உள்ள வாசகங்களின் படி மேற்படி சொத்து ஸ்ரீலஸ்ரீகாசிவாசி அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளுக்கு பாத்தியம் என மேற்சொன்ன ஆவணத்தை எழுதிக்கொடுத்த மனுதாரரின் தந்தை மருதமுத்து என்பவரே ஒப்புக்கொண்டுள்ளார் என்றும் தெரிவித்தார். மேற்படி சொத்து உரிமை குறித்து மனுதாரர் ஏற்கனவே உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றினை தாக்கல் செய்து நிலுவையில் உள்ளதென்றும் தெரிவித்தார்.

5. மேற்கூறியவற்றை கருத்தில்கொண்டு, பொதுத் தகவல் அலுவலரால் மனுதாரர் கோரும் தகவல்கள் தங்கள் வசம் இல்லையென்று மனுதாரருக்கு தெரிவித்துள்ள நிலையில், மேற்படி சொத்து உரிமையை உரிய நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து நடவடிக்கை மேற்கொள்ள மனுதாரருக்கு ஆணையம் அறிவுறுத்துகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான விசாரணையை ஆணையம் முடித்துக்கொள்கிறது.

**ஒம்/-(ஆர். தட்சிணாமூர்த்தி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5404/SCIC/2018</u>**
பெறுநர்
**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
சார் பதிவாளர்
சார் பதிவாளர் அலுவலகம்,
திருவிடைமருதூர்
தஞ்சாவூர் மாவட்டம்

மனுதாரர்
திரு மருத மோகன்
32/96 வடுக்கு வீதி, திருப்பனந்தாள் அஞ்சல்
தஞ்சாவூர் மாவட்டம் 612 504.

*TK/PA 24.09.2019*